ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

===============================================================================

# பாரதிதாசன் கவிதைகளில் பாரதியாரின் கவிதைத் தாக்கம்

*முனைவர் ம.கருணாநிதி*
*தமிழ் - உதவிப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை தூய நெஞ்சக் கல்லூரி ( தன்னாட்சி )*
*திருப்பத்தூர் – 635601*

===============================================================================

*முன்னுரை:*

*எது ஒன்றும் தனித்தனியானது அல்ல. ஒன்று இன்னொன்றோடு நெருங்கிய தொடர்புடையது. கலை இலக்கியம் சுயம்புவாய்த்தோற்றம் பெறுவதுமல்ல. ஒன்று இன்னொன்றோடு நெருங்கிய தொடர்புடையது. கலை இலக்கியம் சுயம்புவாய்த்தோற்றம் பெறுவதுமல்ல. அவை,சமூகத்தோடு இரண்டறக்கலந்த விளைபொருளாகும். சமூகம் - காலம் - இடைவெளி – நெருக்கடி – வாழ்வதற்கானப் போராட்டம் மற்றும் அகவய – புறவயச் சூழலால் உந்தப்பட்டு அக்காலகட்டத்தின் தேவைகளும் படைப்பாளியின் நோக்கமும் சமூகத் தேவையின் பொருட்டு கலை இலக்கியங்களாக உருக்கொள்கின்றன. அக்கலை இலக்கியங்கள் உணர்வுப் பூர்வமாகச் செயல்படுகின்ற தருணத்தில் கலைக்காகவும், சமூகத்திற்காகவும் எனும் இருவேறு தளங்களில் இயங்குகின்றன.*

*பாரதிதாசனுக்கு பாரதியுடனான நட்பு – நட்பின் வழிப்பெற்ற மனத்திட்பம் - ஆக்கப்பூர்வமான தோழமையுணர்வு – அபூர்வகரமான செயலாக்கத்திறன் - இயங்குதலுக்கான சிந்தனை முறைமை – போன்றவை பாரதிதாசன் கவிதைக்குக் கலையின் தோழமை அல்லது கலைதரும் தோழமை என்பது படைப்பனுபவ வெளியில் ஆக்கப்பூர்வமான பயணிப்பில் சுழல்கின்றன. ஒவ்வொரு காலகட்டத்தினிலும் படைப்பும் - படைப்பாளியும் தன் இருத்தலைத் தடம்பதிப்பர். அந்தவகையில் தன்னின் தடத்தை ஆழமாக – நீண்டதாக – நெடியதாகவும் தடம்பரப்பியவர்களில் பாரதியார் - பாரதிதாசன் இருவரும் குறிப்பிடத்தக்கவராவார்கள். மொழி - இனம் - நாடு – பால் - விடுதலை எனும் பன்முகப்பரிமாணங்களில் பாரதி – பாவேந்தரின் லட்சியப்பயணம் மனிதகுல விடுதலையின் சாரமாக அமைப்பெற்றது. ஆக பாரதியாரின் தாக்கம் பாரதிதாசனிடத்தில் பார்க்க இடமுண்டு. இப்பொருண்மையில் ஆய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.*

*கலையும் காலச்சூழலும்:*

*20- ம் நூற்றாண்டின் தொடக்கப் பள்ளியிலேயே இந்நூற்றாண்டிற்குத் தேவையான அரசியல் - பொருளாதார – சமூக சமத்தும் - இறையியல் - கலை – விஞ்ஞான – சுதந்திரம் போன்ற இன்னுமான நிகழ்கால வாழ்வுக்கான விசைகளையும் அதற்கேற்ற பாதைகளையும் வகுத்துக் கொடுத்தவர் பாரதி. பாரதியின் கவிதை வெளி நிகழ்காலத்தோடு முடிந்துவிடக்கூடிய ஒன்றாக அல்லாமல் வருங்காலத்தையும் எதிர்கொள்வதற்கான உள்ளழுத்தங்களையும் பெற்றிருக்கிறது. அவரது தீர்க்கமிகு பார்வைகள், சட்டங்கள் மூலமாகவோ,விஞ்ஞான மூலமாகவோ மனிதர்களின் அகத்தை கட்டாயப்படுத்தியோ – வற்புறுத்தியோ – வரையறைக்குள் கொண்டு வந்துவிடமுடியாது. மனிதரின் அகம் உணர்வுகளோடு உணர்ச்சிகளோடும் பிணைப்புடையது. அதை நெகிழ்த்தவும் இறுக்கவும் கலை வடிவத்தால் மட்டுமே இயலும். தமிழ்ச்சூழலில் பாரதி பாரதிதாசன் தவிர்க்க முடியாத ஆளுமைகள். பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் வழித்தோன்றல் எனும்போதே பாரதியின் அடையாளமும் அதனிலிருந்து பாரதிதாசனின் அடையாளத்தையும் நம்மால் உள்வாங்கிக் கொள்ள இயலும். இந்த அடையாளம் கவிதையின் உருவத்தால்*

*உள்ளடக்கத்தால், கலையும் சமூகமும் இணையும் புள்ளியால் மட்டுமே அமையப்பெறுவதல்ல, நிகழ்காலத்திற்குத் தேவையான வாழ்வியல் வழிகளை உள்ளடக்கியது. இதனால் காலச்சூழலின் பின்புலம் முக்கியத்துவம் பெறுகிறது. காலத்தை அறுத்துக் கொண்டு புதிய காலம் என்ற ஒன்றை நம்மால் படைத்து விட இயலாது. கிளைமட்டும் கனிகளை உற்பத்தி செய்யமுடியாது. விதை முக்கியமானது. அதுபோல், பாரதி எனும் விதையிலிருந்து ஒரு கிளையாக முகிழ்த்த பாரதிதாசன் ஆழ – அகலமாக படர்ந்துள்ளார். இதற்கு பாரதி எனும் வித்து பலமாக, பின்புலமாக உரமாகியிருக்கிறது.*

*பாரதிதாசன் காலச்சூழல், கலை மனிதரோடு நேருக்கு நேர் பேசியும், புரிந்தும் இயங்கும் தளத்தில் இருக்க வேண்டிய தேவையிருந்தது. மன்னர்களுக்கு எழுத்துச்சமாரம் வீசிக்கொண்டோ, நானும் ஒருபுலவனென்று பாட்டுக்களை – செய்யுங்களை அடுக்கிக் கொண்டோ, கலைமனம் என்ற பெயருக்குள் பொழுது போக்குக்கான எழுத்துக்களை நிரப்பிக் கொண்டோ, கலையை பொருளீட்டும் தளமாக ஆக்கிக் கொண்டோ – ஒரு உண்மையான கலைமனம் இயங்க முடியாது. பாரதியின் காலம் - அந்நியரிடம் இந்தியா அடிமை. பிரிட்டிஷின் உறிஞ்சு குழலுக்குள் இந்திய மக்களின் உழைப்பும் செல்வமும் மண்ணின் அளப்பறியாத களஞ்சியமும் பறிபோய்க் கொண்டிருக்கிறது. சுதந்திர உணர்வு தேசத்துரோக உருவாக்கப்படும் பயிற்றுதல் பாரதி எனும் கலையாற்றல், வேதாந்தத்தையும், பகுத்தறிவையும் விஞ்ஞான சமூக உறவை எல்லாம் இழுத்துக் கொண்டு வந்து படைப்பு எனும் புள்ளியில் குவிய வைத்துள்ளார். இவை ஒரு புள்ளியிலிருந்து பல கற்றைகளாக வெளியேறி பாரதிதாசன் படைப்பில் படர்ந்து, பாரதியின் மையம் சுதந்திர இந்தியாவாகவும், பாரதிதாசனின் மையம் தமிழினமாகவும் விரிவடைந்துள்ளது.*

சுதந்திரம்

*சமூக உறவு*

1. சாதியைச்சாடுதல்
2. மத நல்லிணக்கம்
3. ஆண் - பெண் நிகர்
4. இயற்கையோடு இயைந்த மனிதம்
5. மொழி இனம் நாடு மீட்டுதல்

விஞ்ஞானம்

1. பல்துறை அறிவு
2. மொழிபெயர்ப்பு
3. கலைவளம்
4. பொருள் சார்ந்த விசயங்கள் (பகுத்தறிவு, வேதாந்தம் போல்வன)

*இவ்வாறான படைப்பின் குறிப்பிட்ட பொருண்மை வெளியில் பாவேந்தரில் பாரதியை அவதானிக்கலாம்.*

*சமூகச்சிக்கல் அல்லது சமூக இயங்குதளத்தை ஒட்டியே கலைச்செறிவு அமையும், சங்க காலத்தில் ஆசிரியப்பாக்களான தனிப்பாடல்களின் வளர்ச்சியிருந்தது. ஆனால் காப்பிங்களின் எழுச்சிக் காலத்தில் அகவற்பா வடிவம் பின்தங்கி சீவகசிந்தாமணி, கம்பராமயணம் - கிளைக்கதைகள், துணைக்கதைகள்,வர்ணிப்புக்கள் ஆகியவற்றின் பெருவெளிக்குள் விருத்தப்பா எனும் புதிய வடிவம் ஆட்சி செய்தது. பக்தி இலக்கியம் இதையும் தாண்டிய பல பாக்களைத் தந்தது. 20 ஆம் நூற்றாண்டின் முதற்புள்ளி – மரபிலிருந்து விடுதலை பெறுகிறது. மரபினை முற்றாக முறித்துக் கொள்ளாமல் மரபான விசயங்களையும் வித்தாக எடுத்துக் கொண்டு காலத்தேவையின் அடிப்படையில் புதிய பயணத்தில் பயணிக்கிறது. இப்பயணிப்பைத் துவக்கியவர் பாரதி. நெருஞ்சாலையிலும் கிளைச்சாலையிலும் அதைத் தொடர்ந்தவர் பாரதிதாசன் என்றே கூறவேண்டும்.*

*உருவ உள்ளடக்கம் படைப்பின் பிரிக்கமுடியாத நிலைக்களன்கள். இந்த நிலைக்களன்கள் வழி பாரதி பாரதிதாசன் இருவரும் செயல்பட்டனர். பாரதிக்கு முன்பிருந்த பிரபந்தத்தாக்கத்தினைப் பாரதியும் பெற்றிருந்தார். இதனின் நீட்சியாகவே பாரதியின்*

குயில்பாட்டும் கண்ணன்பாட்டும் எனச் சொல்லலாம். ஆனால் இவற்றின் உருவம், உள்ளடக்கம் எளிய மரபாகவும் அதே சமயம் உள்ளடக்கம் என்பது சுதந்திரதாகத்தையும் கொண்டிருந்தது தமக்குள் நாட்டுப்பற பிரபந்த வகையை யாப்புருவை கைகொண்ட பாரதி அது (படைப்பு) சென்று சேருமிடத்தை அக்கறை கொண்டிருந்தார் எனலாம். எனில், ஜமினிலிருந்தும் மடங்களிலிருந்தும் தெருவிற்குக் கொண்டுவந்து கவிதையை விரிவுபடுத்தியவர். இந்த விரிவு, கவிதையை பாமர மக்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதுடன் மனிதர்கள் கவிதைக்களத்தோடு சேர்வதை அவசியப்படுத்தினார். இக்களச் சேர்ப்பையே பாரதிதாசன் பின்பற்றுகிறார். பழமைக்குள்ளேயே முடித்துக் கொண்டவனுமல்ல,பழமையில் தன்னை அமிழ்த்திக் கொண்டவனுமல்ல. அதனாலும் பிழைத்துக் கொண்டவனுமல்ல என்று பாரதியை,

"பழைய நடை பழங்கவிதை பழந்தமிழ்நூல்
பார்த்தெழுதிப் பாரதியார் உயர்ந்தாரில்லை"[1]

என்று பாரதிதாசன் குறிப்பிடுகின்றார்.

தமிழ் வெளியில் பாரதியையடுத்து பாரதிதாசன் :

மொழியின் செயல்தளம் கருத்துப்பரிமாற்ற வினையாகவே கருதப்பட்ட சூழலில் இடம்,இடத்தால் உண்டாகும் தகவமைப்புகள் இடத்தினோடு ஆக்கம் பெறும் சிந்தனா முறைகள்,தொழில்வளம்,தொழில்வளத்தால் கட்டமைக்கப்படும் அரசியல்,மனித மனவெளியென இன்னும் பலவற்றோடு பின்னிப்பிணைந்தது மொழி என்பது தற்கால புரிதலில் வழிவகுப்பாக உள்ளது. இதன் அடிப்படையில் மொழியின்; செயல்தளச் சாத்தியக்கூறுகளை அம்மொழியின் புலமைப் பட்டவராலேயே விரிவாக்க முடியும் என்பது வெளிப்படையாகும்,இதஞீடத்தைப் பற்றிப்போகும் போது பாரதியர்,

"தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே"[2]

என்கிறார். இக்குரலுக்குள் 'தொல்லை', 'தொல்லையகன்று' என்ற சொற்களினூடாக அக்காலத்து சமூக நிகழ்வினைப்பிரதி பலிக்கின்றது. பாரதியாரின் இந்தப்பார்வையை உள்வாங்கிக் கொள்ளும் பாரதிதாசன் இடத்திற்கான தீர்வை மொழியின் மூலமாகவே பெற்றுவிட முடியுமென,

"இன்பத்தமிழ்க்கல்வி யாவரும் கற்றவர்
என்றுரைக்கும் நிலை எய்துவிட்டால்
துன்பங்கள் நீங்கும் சுகம் வரும் நெஞ்சினில்
தூய்மை யுண்டாகிடும், வீரம் வரும்".[3]

எனக் கூறுகிறார்.

பாரதி 'தொல்லை',தொல்லையகன்று' எனும் சொற்களுக்கு பாரதிதாசன் 'நெஞ்சினில் தூய்மை உண்டாக்கும் எனும் பதிலாக அமைகின்றது. தூய்மையுண்டாக்குவது தமிழ்மொழி,தமிழ் மொழிக்குள் மனித வளத்திற்குத் தேவையான அறங்கள் இருப்பதனை ரத்தினச் சுருக்கமாக குறிப்பிடுகிறார். கல்வி அதற்குச் சரியான வழியென்பதை இங்கே உணரமுடியும். இங்கே பாரதியின் சிந்தனையை தம் வழியாக நீட்டித்துச் செல்கிறார் பாரதிதாசன்.

மொழி என்பது புலவனுக்குள் ஊடுருவி இன்பத்தை அளிப்பது அவ்வவ்மொழிப்புலவனின் கருத்துகோள். பாரதி மற்றும் பாரதிதாசனின் தமிழ் உயர்வு பற்றிய சொல்லாடல்களை நாம் இவ்வகையிலேயே புரிந்து கொள்ள முடியுமே தவிர, வெறும் உயர்வு என்ற ஒருமையடையாளமல்ல, கவிஞனின் மிகை உணர்வால் உந்தப்பட்டதுமல்ல,காரணம்,மொழி என்பது நாகரீகம்,பண்பாடு,இன அடையாளத்தோடு தொடர்புடையது.

மரபுக்களிடமிருந்து விடுதலை பெற்று புதுமை நோக்கிய முதல் பயணிப்பின் பங்கிடே முதன்மையானது. கவிதையில் எளிமை என்பது முன்னரே இருந்தாலும், அவை சமூக செயல்தளத்தோடு இணைவதற்கு பாரதியின் காலமே வாய்ப்பாக இருந்தது அன்னயரிடம் அடிமைப்பட்டிருந்த பூமியை விடுதலை பெற்ற அக்னிக்குஞ்சாகவும், தலைகளை விடுத்துக்கொண்ட புதிய வித்தாகவும் பார்க்க காத்திருந்த பாரதி விடுதலையை தீர்க்க தரிசனமாகவே எடுத்துக்கொண்டு அதற்கு முன்பாகவே இறந்துவிட்டார், பாரதிக்கு இறப்பு நிகழாதிருந்தால் கலைஞனும் சமூகமாயுமிருந்த அவரின் பங்களிப்பு எதுவரை விரிந்து

*சென்றிருக்கும் என்பது ஆச்சரியப்பட வைக்கும் ஏக்கமாகவே இருக்கிறது. 'ஒருவகையில்'பாரதியின் பிம்பமாகவே பாரதிதாசனைப் பார்க்க முடியும். பாரதியுடன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டதுடன் பாரதிப்பாக்களை விரும்பிக் கற்றதுமல்லாமல் - பாரதி மண்டலத்தில் இணைந்தது அல்லாமல் - பாரதி கவிதைகளை தமது வெளிப்பாட்டு உள்ளடக்கங்களாக ஆக்கியது மட்டுமல்லாமல் - பழகியதும் - பகிர்ந்தது – அடைக்கலம் தந்தது – அவருடனேயே தன்னை முழுமையாக பிணைத்துக் கொண்டது என பாரதிதாசன் பாரதியின் ஆளுமைகளை உள்வாங்கியவராகவும் அதை புதிய பரிமாணங்களுக்குள் எடுத்துச் செல்லும் தன் அடையாள ஆளுமையைப் பெற்று விளைகிறார்.*

*பாரதியின் தேசியம் அந்நியருடனான சமரைப் பேசுவது. சுதந்திர இந்தியாவில் வாழ்ந்த பாரதிதாசனுக்கு இந்தச்சமர் இந்தியக் கட்டமைப்புக்குள்ளேயே செயல்பட வேண்டியதாயிற்று. பாரதி துவக்கி வைத்த சமர் பல கிளைகளாக இயங்குகின்றது. மொழி வடிவம் - இடவடிவம் - இன வடிவம் எனப் பார்க்க முடியும். பாரதியின் வேதாந்தம் - பாரதிதாசனின் பகுத்தறிவு, வேற்றுமைகளுக்கான அடித்தளங்கள். மொழியால்,உணர்வால் சமூகத்தேவையால் பிரிபடும் புள்ளிகளை முழுக்க எதிர்நிலைபடுத்த தமிழ், தமிழ்நாடு, தமிழ் உணர்வு – என ஒரு புள்ளியிலிருந்து ஒரே கோடாக இல்லாமல் இணைகோடுகளாய் செல்லும் ஆற்றல் உடையது.*

*பாரதி தலைமுறைக் கவிஞர்களுள் பாரதிதாசன் ஒருவர்தான் தலை நிமிர்ந்து நற்பவர் எனலாம். பாரதியின் முற்போக்கு எண்ணங்களையும்,ஆவச உணர்ச்சிகளையும் உட்கொண்டு தெளிவும் அழகும் எளிமையும் நிரம்பிய கவிதைகளை எழுதியவர் பாரதிதாசன். வடமொழி எதிர்ப்புணர்ச்சியோடு இறுதி வரை வாழ்ந்த பாரதிதாசன், வடமொழிக் காவியம் ஒன்றைக் கதைப் பொருளாக்கி அதில் சுதந்திர உணர்ச்சியையும் தமிழ் உணர்ச்சியையும் கொழுந்துவிட்டு எறியச் செய்திருக்கிறார்.*

*"ஒரு மனிதன் தேவைக்கே இந்தத்தேசம்*
*உண்டென்றால் அந்தேசம் ஒழிதல் நன்றாம்"*[4]

*எனும் பாரதிதாசனின் முழக்கம்.*

*"தனி ஒருவனுக்கு உணவிலை யெனில்*
*ஜகத்தினை அழித்திடுவோம்".*[5]

*எனும் பாரதியின் முழக்கம் பாரதிதாசனின் பொதுவுடமைச் சிந்தனையாய் மலர்ந்துள்ளது. புரட்சிக்கவி உருவத்திலும் உள்ளடக்கத்திலும் (கழசஅ யனெ உழவெநவெ) பாரதியின் பாஞ்சாலி சபதத்திற்கு நிதரானது. கண்ணீரில் வாழ்க்கை ஓடத்தை செலுத்திய விதவைகளின் கொடுமைகளை பாரதி உரைநடையில் எழுதினார். பாரதிதாசன் கவிதையில் எழுதினார். ஏற்றத்தாழ்வற்ற சோசலிக சமுதாய மலர்ச்சியின் அருமையும் உழகை;கும் பாட்டாளி வர்க்த்தின் பெருமையும் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடும் மூடப்பழக்க வழக்கங்களின் சிறுமையும் பாரதிதாசனின் பாடற்பொருளாகும். பாரதியின் சமூக இயங்குதளத்தை பாரதிதாசன் வேகப்படுத்தினார்.*

*"தரையில் படுத்தல் வேண்டும்*
*சாதம் குறைத்தல் வேண்டும்*
*வருந்தாமற் கைம் பெண் முகம்*
*மறுமணம் புரிவது சிறுமை என்றறைவது*
*குறுகிய மதியென அறிஞர்கள் மொழிகுவர்."*[6]

*என பாரதியின் சிந்தனைத் தளத்தினை விரிவுபடுத்தியுள்ளார் பாரதிதாசன்.*

*நாமிருக்கும் நாடு நமக்கே உரியது. அந்நியரால் மண்ணிற்கு உரியவர் அந்நியப்படும் நிலையினை அகற்றி நாமக்கானது என்பதை*

*"நாமிருக்கும் நாடு நம தென்பதறிந்தோம் - இது*
*நமக்கே யுரிமையோ யென்பதறிந்தோம்*
*அறிய வழி செய்கிறார் பாரதியார்"*[7]

*பாரதி வகுத்த வழி பாரதிதாசன் அந்நியரின் சுரண்டலை அழிக்க புரட்சி முழக்கமாய் மாற்றுகிறார்.*

*"அவனவன் நாட்டில் அவனவன் வாழ்க – மற்றயல் நாட்டைச் சுரண்டுதல் அடியோடு வீழ்க"*[8] என்றும்

*“தமிழுக்குத் தமிழே தாய்மொழி என்றோம் - தமிழகம் தமிழர்க்குத் தாயகம் என்றோம்”, “தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை”*[9]

*என்கிறார் பாரதிதாசன். இந்திய சுதந்திரம் பாரதிக்கு ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என கனவாக இருந்தது. பாரதிதாசன் கவிதைவழி விடுதலை குறித்த கருத்தாக்கம் வேறுதளத்தை நோக்கி நகர்ந்துள்ளது.“விடியா விடுதலை விடிவது எந்தநாள்?” எனப் பாரதிதாசன் பாரதியின் சுதந்திர அடித்தளத்தை கேள்வியோடு விரிவுபடுத்தியுள்ளதைப் பார்க்கமுடிகிறது.*

*தொகுப்புரை :*

- *அரசியல், பொருளாதார தளங்களில் பன்முகப்பரிணாமங்களின் பாரதிதான் கவிதைக்குள் மகாகவி பாரதியாரைப் பார்க்க முடியும்.*
- *இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இந்நூற்றாண்டிற்குத் தேவையான அரசியல், பொருளாதாரம், கலை -விஞ்ஞானம், சுதந்திரம் போன்ற நிகழ்கால விசயங்களுக்கான பாதைகளை வகுத்துக் கொடுத்தவர் பாரதி - இப்பாதை பாவேந்தரின் படைப்பின் பயணிப்பிற்கு ஒருவகையில் அச்சாரமாய் விளங்கியுள்ளது.*
- *பாரதியின் நட்பின் வழியாகப் பெற்ற ஆக்கப்பூர்வமான விசயங்கள், சமகாலத்து முற்போக்கு சிந்தனை முறைமைகள் பாரதிதாசனின் கவிதை வெளியாகக் காணமுடியும்.*
- *பாரதியின் சமூக இயங்குதளத்தை, மொழி, இனம், நாடு, விடுதலை போன்றவைகளைப் பாரதிதாசன் வேகப்படுத்தியுள்ளார்.*
- *சங்க காலத்து யாப்பு முறைமைகள் நாட்டார் இசை மரபுகள் போன்றவைகளின் வழியாக எளிமை, அழகு, கலை, நுட்பம் இவையினூடாகப் பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகளில் பாரதியைக் காண முடிகின்றன.*

*முடிவுரை :*

*கலைப்படைப்பின் சமூக இயங்குதளமாக – கலைஞன் சமூகத்தின் பிரதிநிதியாக - கலையை -வாழ்க்கையை உணர்வுப்பூர்வமான - அறிவுப்பூர்வமான தளத்தில் உருவ உள்ளடக்கம் எளிமை இவைகளினூடாகப் பாரதியிடமிருந்து பாரதிதாசன் சுவிகரித்துக் கொண்டுள்ளார். பாரதியார் தமிழ் மரபின் நீண்ட துயரங்களை நீக்க பாடிவந்த நிலவாய்த் தம் காலத்து அரசியல் - பொருளாதாரத் தளங்களில் இந்திய தேசியத்தையும் மொழி உணர்வையும் தம் கவிதை வெளிக்குள் கொண்டுவந்துள்ளார். படைப்பின் நோக்கம், சமூக அனுபவங்களைப் பிரதிபலிப்பது மட்டுமல்லாமல் அழகு, கலைநுட்பம் சம்மந்தமாக செயல்படக்கூடியது. அவ்வகையில் பாரதி பாரதிதாசன் இருவரும் சமூக அனுபவங்களைப் படைப்பின் வழி ஆழப்படுத்தியுள்ளார்கள். இவ்விரு ஆளுமைகளுள் பாரதிதாசனுக்குள் பாரதியை அவதானிக்க முடியும்.*

*அடிக்குறிப்புகள் :*

1. *பாரதிதாசன் கவிதைகள், ப.219.*
2. *பாரதியார் கவிதைகள், ப.174.*
3. *பாரதிதாசன் கவிதைகள், ப.110.*
4. *மேலது, ப. 351.*
5. *பாரதியார் கவிதைகள், ப.167.*
6. *பாரதிதாசன் கவிதைகள், ப.104.*
7. *பாரதியார் கவிதைகள், ப. 186.*
8. *பாரதிதாசன் கவிதைகள், ப.582.*
9. *மேலது, ப. 587.*

*பார்வை நூல்கள்:*

*1. பாரதியார் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை – 8, 1997.*

*2. பாரதிதாசன் கவிதைகள், ஸ்ரீசெண்பகா பதிப்பம், பாண்டிபஜார், சென்னை – 17, 2001.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********